ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2134/56 - 2019 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2019.08.02

*2134/56 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டி. பி. 5/1991*

**1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 5 (ஊ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 (2) (அ) ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2019, யூலை 19.

ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதியானது 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சந்தாதாரர் சிம் (SIM) காட் (மொடியூள் - சிம் (SIM) என்று எடுத்துக்காட்டப்படலாம். அத்தோடு இந்த ஒழுங்குவிதிகள் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன் அமுலுக்கு வருதல் வேண்டும்.

2. டிஜிடல் செலியுலர் கையடக்கத் தொலைபேசிச் சேவைகளை வழங்குவதற்கான சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ், அனுமதிப்பத்திரம் பெற்ற சகல செயற்படுத்துனர்களுக்கும் இந்த ஒழுங்குவிதிகள் செயல்வலுப் பெறும்.

3. சில்லறை சந்தாதாரர்கள் மற்றும் கூட்டுச் சந்தாதாரர்களின் சிம் காட்களை பதிவுசெய்யும் நோக்கத்திற்காகவும் அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சகல செயற்படுத்துனர்களும் இணங்கி செயற்படுதல் வேண்டும்.

4. இங்கு அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக அவ்வாறான செயற்படுத்துனரால் கடைப்பிடிக்கப்படுகின்ற செயன்முறைகளின் விபரம் பற்றி இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு (இதனகத்து "இ. தொ. தொ. ஒ. ஆ." "TRCSL" என குறிப்பிடப்படலாம்) சகல செயற்படுத்தனர்களும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. இ. தொ. தொ. ஒ. ஆ. (TRCSL) இந்த ஒழுங்குவிதிகளின் முறையான அமுல்படுத்தல் தொடர்பாக செயற்படுத்துனர்களுக்கு காலத்திற்குக் காலம் வழிகாட்டல்களை பிறப்பிக்குமாக.

6. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்கள் –

"சட்டம்" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டம் எனப் பொருள் விளங்குமாக ;

"கூட்டுச் சந்தாதாரர்" என்பது, ஏதேனும் நபர் தனது கம்பனியின் பெயரின் கீழ், தனது கம்பனியின் ஊழியர், முகவர்கள் அல்லது வேறு ஏதேனும் அதிகாரம் வழங்கப்பட்ட நபர் பயன்படுத்துவதற்காக செயற்படுத்துனரினால் பதிவுசெய்யப்பட்டுள்ள சிம் (SIM) காட்கள் எனப் பொருள்படும் ;

"நபர்" என்பது, கூட்டிணைப்புச் செய்யப்பட்ட அல்லது கூட்டிணைப்புச் செய்யப்படாத நிறுவனமாகும் ;

"சில்லறை சந்தாதாரர்" என்பது, ஏதேனும் நபர் தன்னுடைய தனிப்பட்ட பெயரில், தன்னுடைய சிம் (SIM) காட்டை செயற்படுத்துனரினால் பதிவுசெய்து கொள்ளல் எனப் பொருள்படும் ;

"சிம்" (SIM) என்பது, சந்தாதாரரின் ஆள் அடையாள தொகுதிகள் ஆகும் ;

"'சிம்" (SIM) அட்டை" என்பது, சந்தாதாரரின் ஆள் அடையாளத் தொகுதிகளை உள்ளடக்கி சந்தாதாரருக்கு வழங்கப்பட்டுள்ள காட் பத்திரம் அல்லது "சிப்" எனப் பொருள்படும்.

(ஒழுங்குவிதி 2)

அட்டவணை I

**சில்லறை சந்தாதாரர்களைப் பதிவுசெய்தல்**

சிம் (SIM) காட் சில்லறை சந்தாதாரர்களைப் பதிவுசெய்யும் போது சகல செயற்படுத்துனர்களும் பின்வரும் ஒழுங்குபடுத்துகை விதிமுறைகளுடன் இணங்குதல் வேண்டும்.

1. சில்லறை சந்தாதாரரிடமிருந்து நன்கு பூரணப்படுத்திக் கையொப்பமிட்ட விண்ணப்பபடிவமொன்றைப் பெற்றுக்கொள்க. (கட்டாயமாக தேவையான விபரங்கள் : தேசிய அடையாள அட்டை இலக்கம், நிரந்தர முகவரி, புதிய தொலைபேசி இலக்கம்).

2. 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு விண்ணப்பப்படிவம் பின்வரும் விடயங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும் :-

(அ) சந்தாதாரரினால் முறையாகக் கையொப்பமிட்ட தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் நிழற்பிரதியொன்று ;

(ஆ) சந்தாதாரரின் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் அவருடைய புகைப்படம் தெளிவில்லாது இருக்கும் பட்சத்தில் அவருடைய அல்லது அவளுடைய கையொப்பத்துடன் முறையாக கையொப்பமிட்ட புகைப்படமொன்று.

3. (அ) தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரி நிரந்தர முகவரியாகக் கருதப்படும்.

(ஆ) தற்பொழுதைய சந்தாதாரரின் தற்பொழுதைய முகவரிக்கும் தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் இடையில் வித்தியாசம் காணப்படும் போது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி, தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறான நபர்களின் முகவரி பற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவருடைய கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு தகவல்களை சில்லறை சந்தாதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. சிம் (SIM) காட்டை செயல்படுத்துவதற்கு முன்னர் செயற்படுத்துனரின் தரவுத் தளத்தில் அல்லது வலையமைப்பில் சில்லறை சந்தாதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் பதிவேற்றப்படுதல் வேண்டும்.

5. சிம் (SIM) காட்டை செயற்படுத்தப்பட்டு ஒரு மாத்திற்குள் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் வேண்டப்படும் போது செயற்படுத்துனரின் தரவுத் தளத்தில் அல்லது வலையமைப்பில் 1, 2 மற்றும் 3 ஆம் விடயங்களின் கீழ் பட்டியற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களின் ஸ்கேன் செய்த பிரதிகளை பதிவேற்றுதல் வேண்டும்.

6. காலத்திற்குக் காலம் 5 ஆம் பந்திக்கு ஏற்ப 1, 2 மற்றும் 3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளை இற்றைப்படுத்துவதுடன் அவ்வாறான தரவுகளை அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர் கோரும் போது அவ்வாறான தரவுகளைச் சமர்ப்பிக்கவும்.

7. சந்தாதாரர் ஒருவரின் தரவு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வேண்டும் போது அவ்வாறே தரவுத் தரவுத்தளத்திற்கு அல்லது வலையமைப்புக்கு பிரவேசிப்பதற்கான அனுமதியை சகல செயற்படுத்துனர்களும் வழங்குதல் வேண்டும்.

8. சிம் (SIM) காட்டை செயற்படுத்தப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாவிட்டால், தொலைபேசி இணைப்பினை சகல செயற்படுத்துநர்களும் துண்டித்தல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 2)

*அட்டவணை II*

**சில்லறை சந்தாதார்களை பதிவு செய்தல்**

கூட்டு சந்தாதாரர்களின் பதிவு

சிம் (SIM) காட்டை கூட்டு சந்தாதார்களைப் பதிவு செய்யும் போது சகல செயற்படுத்துனர்களும் பின்வரும் ஒழுங்குபடுத்துகை விதிமுறைகளுடன் இணங்குதல் வேண்டும்.

1. புதிய தொலைபேசிக் கணக்கொன்று தொடர்பாக கூட்டு சந்தாரர் சிம் அட்டையொன்றை வேண்டுகின்ற உடன்படிக்கை அல்லது விண்ணப்பப்படிவத்தை கூட்டுப் பொதியொன்றின் கீழ், கூட்டு சந்தாதாரர் தொடர்பாக அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரினால் நன்கு கையொப்பமிட்டு பெற்றுக் கொள்ளவும்.

2. 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு விண்ணப்பப்படிவம் பின்வரும் விடயங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும் :-

(அ) வியாபார பதிவுச் சான்றிதழின் உண்மைப் பிரதியொன்று;

(ஆ) கூட்டுப் பொதியின் கீழ் இணைப்பொன்றை பெறவுள்ள கூட்டு சந்தாரரின் தற்பொழுதைய ஊழியர்களின் தற்பொழுதைய முகவரிகள் மற்றும் நிரந்தர முகவரிகள், பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விபரப்பட்டியல்.

3. கூட்டு சிம் (SIM) காட்டை செயல்படுத்துவதற்கு முன்னர் செயற்படுத்துநர்களின் தரவுத் தளத்தில் அல்லது வலையமைப்பில் கூட்டு சந்தாதாரரின் வியாபாரப் பதிவு இலக்கம் பதிவேற்றப்படுதல் வேண்டும்.

4. சிம் (SIM) காட்டை செயற்படுத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் வேண்டப்படும் போது செயற்படுத்துனரின் தரவுத் தளத்தில் அல்லது வலையமைப்பில் 1, 2 மற்றும் 3 ஆம் பந்திகளின் கீழ் பட்டியற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களின் ஸ்கேன் செய்த பிரதிகளை பதிவேற்றுதல் வேண்டும்.

5. சிம் அட்டையைப் பயன்படுத்தும் கூட்டு சந்தாதாரர் ஒருவர் பதிவு செய்யப்பட்ட வியாபார நிலையத்தைத விட்டு விலகிச் செல்லும் பட்சத்தில், கூட்டுப் பொதியின் கீழான இணைப்பு துண்டிக்கப்படுதல் வேண்டும்.

6. காலத்திற்குக் காலம் 4 ஆம் பந்திக்கு ஏற்ப கூட்டுப் பொதியின் கீழ் கூட்டு சந்தாதாரரின் விபரங்கள் இற்றைப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறான தரவுகளை அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர் கோரும் போது அவ்வாறே தரவுகளைச் சமர்ப்பிக்கவும்.

7. சந்தாதாரர் ஒருவரின் தரவு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வேண்டும் போது அவ்வாறே தரவுத் தளத்திற்கு அல்லது வலையமைப்புக்கு பிரவேசிப்பதற்கான அனுமதியை சகல செயற்படுத்துனர்களும் வழங்குதல் வேண்டும்.

8. சிம் (SIM) காட் செயற்படுத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாவிட்டால், தொலைபேசி இணைப்பினை சகல செயற்படுத்துனர்களும் துண்டித்தல் வேண்டும்.

8- 655

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.